4. அரசினர் தீர்மானங்கள்.

(அ). விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது விதியின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைப்பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கப்பன் இடத்தில் இல்லை. ஆதலால் அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை? அடுத்து, திரு. வி. கே கோதண்டராமன் அவர்களுடைய தீர்மானம்.

(அ) வேலூர் மத்தியச் சிறையில் கைதிகள் மஞ்சள் காமாலை வயிற்றுக் கடுப்பு முதலிய தொத்து நோய்களால் பீடிக்கப் பட்டது குறித்தும், உடனடி நடவடிக்கைகள் குறித்தும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

'வட ஆர்க்காடு மாவட்டம், வேலூர் மத்திய சிறையில் உள்ள கைதிகள் மஞ்சள் காமாலை, வயிற்றுக் கடுப்பு முதலிய தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படுவதால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது'.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, வேலூர் மத்தியச் சிறையில் உள்ள கைதிகள் அண்மையில் குடற் காய்ச்சலினாலும் பின்னர் மஞ்சள் காமாலை நோயினாலும் பீடிக்கப்பட்டனர்.

இந்தக் குடற் காய்ச்சல் நோய் 28—7—1969 அன்று முதன் முதலாக ஒருவருக்கு ஏற்பட்டது. இந்நோயாளி சிகிச்சைக்காக வேலூர், அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு உடனடியாக மாற்றப்பட்டார். பின்னர், மேலும் சிலருக்கு இந்த நோய் ஏற்பட்டது. மொத்தத்தில் அறுபத்தி நான்கு பேர்கள் நோயுற்றனர். இவர்களில் இருபத்தி நான்கு நோயாளிகள் அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எஞ்சிய நோயாளிகள் சிறை மருத்துவ மனையிலேயே சிகிச்சை பெற்றனர். பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்ட நோயாளிகளுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், இரண்டு கைதிகள் 8–8–1969 தேதியன்று இறந்து விட்டனர்; மற்றொரு கைதி 11–8–1969 தேதி அன்றும், நான்காவது கைதி 18–8–1969 தேதியன்றும் இறந்தனர்.

1969 செப்டம்பர் 13] [திரு. செ. மாதவன்]

இக்கொள்ளே நோய் பரவியிருப்பதை உடனடியாக அறிந்ததும், மாவட்டச் சுகாதார அதிகாரி சிறைச்சாலேக்குச் சென்று பார்வை யிட்டு, எல்லாக் கைதிகளுக்கும், பணியாளர்களுக்கும் காலரா நோய்த் தடுப்பு ஊசி போட்டு "ஸல்ஃபா குனடைன்" மாத்திரை களே வழங்கினர். நோய்த் தடுப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டன. எல்லாச் சாக்கடைகளிலும் கழிப்பிடங்களிலும் டி.டி.டி. மருந்து தெளிக்கப்பட்டதுடன் சுண்ணும்புப் பொடியும் தூவப்பட் டது. கொதிக்க வைத்த குடிநீர் கைதிகளுக்குக் கொடுக்கப் பட்டது. சிறைத் துறைத் தலேவர் நேரடியாகக் கட்டளேயிட்டதன் பேரில், இந்நோயாளிகள் உண்மையிலேயே காலரா நோயினல் பாதிக்கப்பட்டனரா என்பதற்குப் பரிசோதனேகள் நடத்தப்பட் டன. நல்வினேயாக, அவர்களுக்கு அத்தகைய நோய் எதுவுமில்லே. கைதிகள் சிறையிலும் சிறைக்கு வெளியேயும் நடமாடுவதைத் தடுக் கும்பொருட்டுச் சிறை ஆரோக்கியமற்ற இடம் என்று அறிவிக்கப் பட்டது. ஏனைய அறுபது கைதிகளும் குணப்படுத்தப்பட்டு விட் டார்கள்.

மஞ்சள் காமாலே நோய் 13—8—1969 தேதியன்று முதன் முதலாக ஒருவருக்கு ஏற்பட்டது. இந்நோயாளி வேலூர் பெண்ட் லண்ட் மருத்துவ மனேக்கு உடனடியாகச் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அடுத்து 38 நோயாளிகள் சிறை மருத்துவ மனேயில் சிகிச்சை பெற்றனர். இந்நோய் பரவவொட்டாமல் எல்லா நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மொத்தத்தில் 39 கைதிகள் பாதிக்கப்பட்டனர். 11—9—1969 தேதிய நிலவரப்படி அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனேயில் குணப்படுத்தப்பட்ட ஒருவரைத்தவிர 23 கைதிகள் குணப்படுத்தப்பட்டுச் சிறைச்சாலே மருத்துவ மனேயிலிருந்து அனுப்பப்பட்டனர். சிறை மருத்துவ மனேயில் 15 கைதிகள் மஞ்சள் காமாலே நோய்க்காகச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நோய் யாருக்கும் கடுமையாக இல்லே. இந்நோயின் காரணமாக யாரும் மரணமடையவில்லே.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இப்படி மஞ்சள் காமாலே, வயிற்றுக்கடுப்பு முதலிய வியாதிகள் திடீரென்று ஆரம்பிப்பதற்குக் காரணம் என்ன என்று நிபுணர்களேக்கொண்டு ஆராய்ச்சி செய்யப் பட்டதா? குடிக்கத் தண்ணீர் இல்லே என்பது மட்டுமல்லாமல், சுகா தாரமே பாதிக்கப்பட்டிருப்பதால் இது ஏற்பட்டிருக்கிறது. அதற் கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சர் கூறுகிறுர்கள். மத்தியச் சிறையில், ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்குமிடத்தில், நல்ல தண்ணீர் இல்லாததோடு, மருத்துவ வசதியும் இல்லாமல், அவர்கள் வெளியிலே வந்து சிகிச்சை பெற முடியாத சூழ்நிலேயும் இருப்பதால், மிகப் பெரிய அளவில் கண்காணிப்பு இருக்க வேண் டாமா? இனிமேலாவது இப்படி வியாதிகள் ஏற்படாத அளவில் சூழ்நிலேகளே உண்டாக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகள் உன்னதமான முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை நானே அனுபவித்திருக்கிறேன். கனம் அங்கத்தினருடைய அனுபவம்பற்றி எனக்குத் தெரியாது. சுகாதார முறையில் இவை நடத்தப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனல், இப்படிப்பட்ட வியாதிகள், சிறைச்சாலையில் மட்டுமல்லாமல், பல பகுதிகளிலும் வருகின்றன. அதற்கான முன்னெச்சரிக்கையான காரியங்களும் செய்யப்படுகின்றன. அதற்குப் பின்னும், கண்காணிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் அமைச்சர் கூறினர்கள், தான் சிறைச்சாலையில் இருந்து அனுபவம் பெற்றவர் என்று. அமைச்சர் இருந்ததைவிட இருபது மடங்கு அதிகமான அனுபவத்துடன் நான் சொல்லுகிறேன். வெள்ளையன் காலத்தில் சிறைகள் எப்படி இருந்தனவோ, அதே நிலையில்தான் காங்கிரஸ் ஆட்சியிலும் இருந்தன. அதேபோன்றுதான் இன்றைக்கும் கைதிகள் நடத்தப்படுகிறர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேளுங்கள். குற்றம் சாட்டும் பணிகளை இப்பொழுது செய்யக்கூடாது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இனிமேலாவது குடிக்க நல்ல தண்ணீர், இவற்றைத் தயவுசெய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறைகள் மோசமாக நடைபெறுகின்றன என்பதற்கு மறுத்துச் சொன்னேன். வசதிகளைப் பற்றிச் சொல்லுகிறர்கள். தண்ணீர், மருத்துவ வசதி, இவை அளிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று முன்னரே கூறினேன். நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, முக்கியமாகக் கழிவுநீரை அப்புறப்படுத்த, எல்லாச் சிறைச்சாலைகளிலும், 'செப்டிக் டாங்குகள்' ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனல், அதிகமாக வசதிகளைப் பெருக்கிச் சிறைச்சாலைகளை, பங்களாக்களாக ஆக்க வேண்டும் என்று அங்கத்தினர் விரும்பமாட்டார்கள் என்ற நம்பிக்கை உண்டு. முடிந்தவரையில் வசதிகளைச் செய்து கொடுக்கிறோம்.

(ஆ) மதுரை நகரில் உணவுப் பங்கீட்டு முறையில் அரிசியின் அளவு குறைக்கப்பட்டது குறித்து.

DR. H. V. HANDE: I wish to call the attention of the Hon Minister for Food and Commercial Taxes to a matter of urgent public importance, namely, the recent cut in rice ration from 1200

1969 செப்டம்பர் 13] [Dr. H. V. Aande]

grams per week to 800 grams per week in the City of Madurai, and the need to restore the cut in view of the fact that Madurai is the second biggest city in the State of Tamil Nadu.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மதுரை நகரில் சட்டபூர்வப் பங்கீட்டு முறை அமலில் இல்லை. குடும்பக் கார்டு முறைதான் அமலிலுள்ளது.

சட்டபூர்வப் பங்கீட்டுப் பகுதியில் வெளிச்சந்தையில் அரிசி விற்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, அப்பகுதியில் வாழும் மக்களுக்குத் தேவைப்படும் அரிசி முழுவதையும் வழங்குகின்ற பொறுப்பை அரசு மேற்கொண்டுள்ளது. இதை முன்னிட்டு, வயது வந்த ஆள் ஒருவருக்கு வாரத்திற்கு 1,400 கிராம் அரிசி வழங்கப்படுகிறது.

குடும்பக் கார்டுமுறை அமலிலுள்ள பகுதிகளில் வெளிச் சந்தையில் அரிசி விற்கத் தாராளமாக அனுமதிக்கப்படுகிறது. அப் பகுதி மக்கள் வெளிச்சந்தையில் அரிசி வாங்கிக் கொள்ளலாம். வெளிச் சந்தையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படும்போதோ, விலை சற்று ஏறுமுகமாக இருக்கும்போதோ, அரசு குடும்பக் கார்டு முறையின் கீழ் அரிசி வழங்கி மக்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிப்பதுதான் குடும்பக் கார்டு முறையின் நோக்கம். குடும்பக் கார்டு பெற்றுள்ளவர்கள் வெளிச்சந்தையிலும் தாராளமாக அரிசி பெற்றுக்கொள்ள முடியுமாதலால், அவர்களுக்கு ஆண்டு முழுவதும் அரசினர் அரிசி வழங்க வேண்டுமென்ற அவசியமோ சட்டபூர்வப் பங்கீட்டுப் பகுதியில் வழங்கப்படும் 1,400 கிராம் விகிதத்தில் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற அவசியமோ கிடையாது. இந்த அடிப்படையில் தான் அறுவடைக் காலங்களிலும், அரிசிப் புழக்கம் தாராளமாக இருக்கும்போதும் குடும்பக் கார்டுகளின் மூலமாக அரிசி வழங்குவது குறைக்கப்படுகிறது. சில சமயங்களில் அரிசி வழங்குவது நிறுத்தவும் படுகிறது. வெளிச்சந்தை நிலைமையை அனுசரித்தும், விலைவாசிகளையும் அரசாங்கக் கையிருப்பையும் மனதிற்கொண்டும் வழங்கும் அரிசியின் அளவைக் கூட்டிக் குறைக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

26—5—1969-க்கு முன் மதுரை நகரில் குடும்பக் கார்டு முறையில் வயது வந்த அள் ஒருவருக்கு வாரமொன்றுக்கு 1,200 கிராம் வீதம் அரிசி வழங்கப்பட்டு வந்தது. 26—5—1969 முதல் வழங்கப்படும் அரிசியின் அளவு 800 கிராமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மதுரை நகரில் மட்டுமன்றி மாநிலம் முழுவதும் எங்கெங்கு குடும்பக் கார்டு முறை அமலிலுள்ளதோ அங்கெல்லாம் குடும்பக் கார்டுமூலம் அரசு வழங்கும் அரிசியின் அளவு குறைக்கப்பட்டது.

தற்போது தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களிடையே தாராளமாக அரிசி எடுத்துச் செல்லலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளதை இப்பேரவை அறியும். மாவட்டங்களுக்கிடையே இருந்த அரிசிப் போக்குவரத்துத் தடையை நீக்கியதால்,

மதுரை போன்ற பற்றுக் குறைப் பகுதிகளில் அரிசி தாராளமாகக் கிடைக்கின்றது. எனவே, தற்போது குடும்பக் கார்டுமூலம் வழங்கப்படும் அரிசியின் அளவை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை.

Dr. H. V. HANDE : Sir, from the explanation given by the Hon. Minister it is obvious that, even though the quantity has been reduced, there has not been any practical difficulty because rice is coming in the open market. Is it a fact that a few persons including two municipal councillors undertook a fast on this issue?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தது உண்மை. எந்த நோக்கத்திற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பதைக் கேட்டால் அவர்களே சொல்வார்கள். அரசாங்கத்தின் கையிருப்பு நிலைமையை உத்தேசித்து 800 கிராமாகக் குறைக்க வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சி தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்த மட்டில் நிலைமை செம்மையாகவும் சீராகவும் இருக்கிறது. எந்த நோக்கத்திற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள் என்று நாம் அதற்கு ஒரு நோக்கம் கற்பித்துக் கிளர்ச்சி ஏதாவும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இ) தமிழ்நாடு உயர்நீதிமன்றக் கட்டடங்களில் வழக்குரைஞர்களுக்கு அளிக்கப்பட்ட அறைகளிலிருந்து வெளியேற்றப்பட்டதும் தங்குவதற்கு அறைகளின்றி அவர்களுடைய அல்லலும்.

Thiru G. GOMATHISANKARA DIKSHIDAR : Sir, under rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the plight of Advocates of the Tamil Nadu High Court for want of chambers in view of their eviction from the High Court Buildings.

The Hon. Thiru S. MADHAVAN : Sir, I wish to make the following statement :—

The High Court has furnished the following information :—

For some time past, it has been found difficult to have proper accommodation for the offices of the High Court in view of the large number of institution of cases and large volume of records being produced into court. Provision had to be made for keeping in safe custody the records received in connection with election cases, namely, ballot papers, etc. Consequent on the increase in the number of Judges, additional court halls had to be provided for the Judges and the Master and additional chambers for the Judges had also to be provided. This resulted in resumption of chambers which had been allotted to Law Officers of the Government. As a result, the Law Officers of the Government had to be provided with alternative accommodation. The Law Officers also had been requesting for additional accommodation for their officers. There was also increase in the